★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (28 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 151

# வவுனியாவில் 2 வழிகளில் முன்னேற முயன்ற படையினர் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி பின்வாங்கச் செய்தனர்

## 3 சிப்பாய்கள் பலி! இருவர் காயம்!!

யாழ்ப்பாணம், ஏப். 28

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் நேற்று இருவழிகளில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடத்தி பின்வாங்கச் செய்தனர்.

நேற்று அதிகாலை 5 30 மணியளவில் எட்டு ஹெலிக்கொப்டர்கள் மூலம் மேலதிக துருப்புகள் தரை இறக்கப்பட்டு, ஈரும் வான் தாக்குதல்களின் உதவியுடன் கனரக வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

அதேசமயம் ஓமந்தைப் பகுதியில் இருந்து 48 மோட்டார் சைக்கிள்களில் இறம்பைக்குளம் பகுதியை நோக்கி மற்றொரு இராணுவ அணியினர் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினரின் முன்னேற முயற்சிக்கு உதவியாக மூன்று புக்காரா விமானங்களும், இரு பொம்மர்களும் ஹெலிகளும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை இடைவிடாது நடத்தின.

விடுதலைப் புலிகளின் எதிர் தாக்குதல்களை அடுத்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தாக்குதல்களின் போது இராணுவத்தினர் மூவர் உயிரிழந்தனர் என்றும் மற்றும் இருவர் காயம் அடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ 3-6-7)

# கொழும்பில் தமிழர்கள் தங்கும் விடுதிகளுக்குத் தடை வரும்!

## பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு, ஏப்ரல் 28

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர்கள் தங்கும் இரு நூறுக்கும் மேற்பட்ட விடுதிகளை (லொட்ஜுகளை) தற்காலிகமாக தடைசெய்வது குறித்து உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்புக்குள் [வெளியார்] ஊடுருவுவதை தடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்தத் தடை கொண்டு வரப்பட இருக்கிறது என நம்பப்படுகிறது.

கொழும்பில் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தக்கூடும் எனக் கருதப்படுவதால், அந்த பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் ''விடுதி''களை மூடி விடுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

கொழும்பில் விடுதிகளை மூடி விட்டால், தமிழர்கள் அங்கு ''படை எடுப்பதை'' ஓரளவு தடுக்க முடியும் என பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்.

இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வரும் பட்சத்தில் வடக்கு-கிழக்கில் இருந்து செல்லும் பயணிகள் பெரிதும் பாதிப்படைவர் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

தற்பொழுது கொழும்பு புறக்கோட்டையில் 85 விடுதிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாவித் தமிழர் இருவர் கத்திக் குத்துக்குப் பலி

யாழ்ப்பாணம், ஏப். 28

நேற்று வவுனியா பகுதியில் இடம்பெற்ற இராணுவ முன்னேற்ற முயற்சியின் போது அப்பாவித் தமிழர் இருவரை சிங்கள இராணுவத்தினர் கத்தியால் குத்திக் கொலை செய்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் முன்னேறிய இராணுவத்தினரே இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டனர். அவர்கள் தமிழரின் கடைகள் மற்றும் வாகனங்கள் சிலவற்றையும் எடுத்து நாசம் செய்தனர்.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த அ. ஞானமுத்து நெடுங்கேணியைச் சேர்ந்த மா. இராமச்சந்திரன் ஆகிய இருவருமே கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தவர் ஆவர்.

(ஒ-3)

## குடியிருப்புக்கள் மீது அகோர வான் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 28

வவுனியாப் பகுதியில் நேற்று படையினரின் முன்னேற்ற நடவடிக்கையின்போது, தமிழ் மக்களின் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்மூடித்தனமாக வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் கண்டபடி குண்டுகளை வீசித்தள்ளின.

இறம்பைக்குளம், பன்றிக்கெய்தகுளம், பனிச்சந்ராவியடி ஆகிய பகுதிகளிலேயே மிக மோசமாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. சேத விவரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களும் தொடர்ந்தபடி இருந்தன. (ஒ-3)

## 4 வார யுத்த நிறுத்தம் கொண்டு வர வேண்டும்

### தேசிய சமாதான சபை அறிக்கை

கொழும்பு, ஏப். 28

அரசும் புலிகளும் நான்கு வார யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ள வேண்டும். இந்தக் கால எல்லைக்குள் ஆக்கபூர்வ யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தலாம். இந்த யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வெளிநாட்டவர்களும் பங்குபற்றும் குழுக்களை நியமிக்கலாம்.

— இவ்வாறு தேசிய சமாதான சபை நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை மீறப்பட்டதால் எழுந்துள்ள நிலைமை குறித்து இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கமும் இலங்கை தேசிய சமாதான சபையும் கவலை தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொள்வதான புலிகளின் முடிவு நீதி நியாயமானதல்ல. எனவே புலிகளின் நடவடிக்கையைக் கண்டிக்கிறோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-7]

## வடமராட்சிக் கடலில் நேற்றும் தாக்குதல்

### ஒருவர் காயமடைந்தார்

வடமராட்சி, ஏப். 28

வடமராட்சிக் கடல் பிராந்தியத்தில் நேற்றுக் காலை ரோந்து சென்ற கடற்படையினர் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கியும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கியும் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் காயம் அடைந்தார்.

றோலர் மீன்பிடிப் படகு ஒன்று பலத்தசேதம் அடைந்தது.

றோலரில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

பொலிகண்டி ஆலடிப்பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் கதிர்காமராசா (வயது– 35) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவர் முதலில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மற்றும் ஒரு சம்பவத்தில் இரு மீனவர்களை அவர்களின் பிளாஸ்டிக் படகுடன் கடற்படையினர் இழுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினசாமி சைருபன் (வயது–18), துரைசாமி சிவலிங்கம் (வயது 23) ஆகியோரே இந்த இரு மீனவர்களும் ஆவார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழப்போர்-3 நடக்க அரசு இடம்கொடாது

## பாரிஸ் புறப்பட முன் சந்திரிகா

கொழும்பு, ஏப். 28

ஈழப் போர்– 3 இன்னும் தொடங்கவில்லை. அது ஆரம்பித்து விட்டதாகக் கருதுவது தவறாகும்.

ஈழப்போர்— 3 நடப்பதை அரசு விரும்பவில்லை. அதற்கு அரசு இடங்கொடாது.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

ரூபவாஹினிக்கு ஆங்கிலத்தில் வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரபல பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணாயக்கா ஜனாதிபதியைப் பேட்டி கண்டார்.

ஈழப்போர் — மூன்றுக்கு நாட்டைத் தள்ளும் விதத்தில் அரசு நடந்து கொள்ளாது. விடுதலைப் புலிகள் தாக்கினால் பதில் தாக்குதல் நடத்துமாறும், அவசியம் ஏற்பட்டால் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை நடத்துமாறுமே படையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து விட்டது என்று மனச்சோர்வு அடைந்துவிடக் கூடாது.

இன்னொரு போரை நடத்தக் கூடாது என்பதே எமது விருப்பம். நாட்டை ஈழப் போர் மூன்றுக்குத் தள்ளாமல் இருக்குமாறு விடுதலைப்புலிகளை இணங்கச் செய்வதற்கு தமிழ் மக்கள் முயற்சிக்க வேண்டும்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொலீஸ் நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, ஏப். 28

கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதால்—

அங்குள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

24 மணித்தியாலமும் பொலிஸார் விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிகப் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இரவு வேளைகளில் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-6)

## வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்டு கொழும்பு சென்ற மாணவர் முடிவின்றி திரும்பினர்

யாழ்ப்பாணம், ஏப். 28

பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி நிர்ணய முறையால் பாதிக்கப்பட்ட யாழ் மாணவர்களின் சார்பில் கொழும்பு சென்றிருந்த எட்டு மாணவப் பிரதிநிதிகள் எதுவித தீர்வும் கிடைக்காத நிலையில் வெறும் உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியதை அடுத்து நேற்று முன்தினம் யாழ். திரும்பியுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதி குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர் விஸ்வவர்ண பால, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தனர்.

கொழும்பில் அண்மையில் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளமையால் அங்கு தங்கி நின்று மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் தாம் திரும்பி விட்டதாக அந்த மாணவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (ஒ-7)

## அரச ஊழியர் சம்பள உயர்வு ஆராய்வதற்கு ஆணைக்குழு

### ராஜன் ஆசிர்வாதமும் ஓர் உறுப்பினர்

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு பற்றி ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சு செயலாளரும் தூதுவருமான பி. சி. பெரேரா ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கிறார்.

வாழ்க்கைப் படி, விசேட படி என்பவை பற்றியும் இந்த ஆணைக்குழுவால் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அத்துடன் அரசின் நிதி நிலைமைகளுக்கேற்பவும் சிபார்சுகள் செய்யப்படும்.

இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் ஓய்வு பெற்ற நீதியரசர் டபிள்யூ குணசேகர, கல்வி உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் எம். டி. டி. பீரிஸ், சம்பள ஊழியர் பொறுப்புத் தலைவர் சிறில் கமகே, சத்திர சிகிச்சை நிபுணர் தயா சிறி பெர்னாண்டோ, அரச பொறியியல் கூட்டுத்தாபனத் தலைவர் பி. ஏ. என். தெரணியகல ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இ-7

(முன் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## ஆளுநர் சென்னா ரெட்டிக்கு எதிரான

# ஜெயலலிதாவின் ரிட்மனு நீதிமன்றினால் தள்ளுபடி

சென்னை, ஏப். 28

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக வழக்குத் தொடர ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதி அளித்ததை எதிர்த்து முதலமைச்சர் ஜெயலலிதா தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் நேற்று தள்ளுபடி செய்தது.

ஆளுநரின் முடிவை எவரும் கேள்வி கேட்க இயலாது என்ற அரசியல் சட்டத்தின் 361 ஆவது பிரிவின்படி இந்த ரிட் மனுவை தள்ளுபடி செய்வதாக டிவிஷன் பெஞ்ச் நீதிபதி ஸ்ரீனிவாசன் அறிவித்தார்.

நீதிபதிகள் எம். ஸ்ரீனிவாசன், எஸ். எஸ். சுப்பிரமணி ஆகியோரைக்கொண்ட டிவிஷன் பெஞ்ச் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ரிட் மனுவை ஏற்பதா என்பது குறித்து சென்ற வாரம் சம்பந்தப்பட்ட தரப்பினரின் வாதங்களை கேட்டறிந்தபின தீர்ப்பை ஒத்திவைத்திருந்தது.

ஆளுநரின் உத்தரவு தனிப்பட்ட முறையில் ஆளுநருக்கு இருந்த காழ்ப்புணர்ச்சி உள்நோக்கம் காரணமாக அளிக்கப்பட்டது என்று வாதத்தின் போது ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டது.

தம்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் அவர் தரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்த பதில்பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாரிஸ் சென்றுள்ளதை அடுத்து பதில் பாதுகாப்பு அமைச்சராக கேணல் அனுருத்த ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார். [இ-7]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**NEW SCIENCE HALL**

Kannathiddy Road Jaffna

**97 A/L**

சனி, ஞாயிறு வகுப்புகள்
புதிய பிரிவு

CHEMISTRY திரு. மணியம் 3 00 – 4 00

BOTANY திரு.குணசீலன் 3 00 – 4 00

ஆரம்பம் **29-04-95**

(சி/1104)



## அறிவித்தல்

**தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில்**

வருடாந்த வெளிமடை. வாக்கிய பஞ்சாங்கப் படியும், கோவில் அர்ச்சகரின் சிபார்சின் படியும் பின் வரும் திகதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

விளக்கு வைப்பு: **26-05-1995** (வெள்ளிக்கிழமை)

வெளி மடை **02-06-1995** வெள்ளிக்கிழமை

சபா ரவீந்திரன்,
தலைவர்,
தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்,
தரும பரிபாலன சபை.

(36436)



வீதி அபிவிருத்தித் திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

## வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல்

மேற்படி திணைக்களத்தின் யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு அரசாங்கப் பிரிவிற்கும் உட்பட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகளைப் பராமரிப்பதற்குத் தேவையான ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தகைமைகள்**

1. பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக இருந்திருத்தல் வேண்டும்.

அல்லது

2. க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவராகவும், வீதி அமைப்பு, பராமரிப்பு ஆகியவற்றில் 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ளவராகவும், இருத்தல் வேண்டும்.

அல்லது

3. வேறு திணைக்களங்களில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டவராகவும், வீதி அமைப்பு, பராமரிப்பு வேலைகளில் குறிப்பிடத்தக்க வேலைகள் மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அத்துடன்

நிதி ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். நிதி ஆற்றல் குறைந்தது 10 இலட்சம் இருத்தல் வேண்டும். இதில் 3 இலட்சம் வங்கி உத்தரவாதமாகவும் மிகுதி பிரதேச செயலரின் அத்தாட்சி மூலமோ வருமானவரித் திணைக்கள ஆவணங்கள் மூலமோ நிரூபித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர்கள் பிரதான பொறியியலாளர், யாழ்ப்பாணம் அவர்களின் கணக்கில் ரூபா 25,000/- நிலையான வைப்பில் வைக்கும்படி வேண்டப்படுவர்.

சொந்தமாக உழவு இயந்திரம், லொறி போன்ற வாகனங்கள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பப் படிவங்களை ரூபா 50/- செலுத்தி (மீளளிக்கப்படாத) 05-05-1995 தொடக்கம் 12-05-95 வரை இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 26-05-95 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

சே. இராஜேஸ்வரன்,
பிரதான பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி-1098]



## ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் சங்கரப்பிள்ளை வீரசிங்கம்**

[நாடக மேடை உரிமையாளர்]
ஜெயா புரமொக்சன்

மலர்வு: 13 – 01 – 1932

உதிர்வு: 09 – 05 – 1994

திதி: 28 — 04 — 1995

பண்போடும், பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கிய எம் அன்புத் தெய்வமே - நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு என்றென்றும் எம்மை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
மகன் வீ. பாஸ்கரன்
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

[8508]


72 மணித்தியாலம் கொடுக்கவில்லை என்கிறார்கள்

# 21 நாட்கள் முறையான அவகாசம் வழங்கினோம்

## இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு அமைவாக நடந்து கொள்ளாது 72 மணித்தியாலத்துக்குள் போரைத் தொடங்கி விட்டோம் என்று அரச தரப்பில் கூறுகின்றனர். ஆனால் நாம் அரசுக்கு 21 நாட்கள் முறையான கால அவகாசம் கொடுத்த பின்பே போரைத் தொடங்கினோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஊரெழு அம்மன் கோவில் முன்றலில் நேற்று நடத்திய மாவட்ட மட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு ஒப்பிலறிவன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. இளம்பரிதி தொடர்ந்து தெரிவித்ததாவது.

நாம் ஒரு நியாயபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டியிருந்ததாலேயே இந்த முடிவை எடுத்தோமே தவிர நாம் போரில் பிரியம் கொண்டவர்கள் அல்ல. அரசின் தற்போதைய போர் பிரகடனம் மனவேதனைக்குரியது

இன்று அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிவதற்கு எமது பாரம்பரிய பண்டைய முறைகளை பேணும் வகையில் அமைந்திருக்கும் இந்த உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் இன்றைய நேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இப்படி அவர் கூறினார்.

இந்த உற்பத்தி எழுச்சி வாரப் போட்டியில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி பொது முகாமையாளர் திரு. அருள் ஏற்றிவைத்தார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப. திலகநாயகம் போல், யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றிவைத்தனர்.

கோப்பாய் பிரதேச செயலர் திரு. கேதீஸ்வரன் போட்டிகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

துலாப்பட்டை மூலம் நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனைமரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், உணவுப் பண்டம் தயாரித்தல், தும்புத் தடி தயாரித்தல் விளக்குமாறு தயாரித்தல் போன்ற போட்டிகளும் இங்கு நடைபெற்றன. (இ-4)

### பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஏப். 28

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டு இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் செல்வி போ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி. டபிள்யூ ஜெயகுலராஜா கலந்து கொள்வார்.

(ஐ-5

### பிரெஞ்சு டாக்டர் நாடு திரும்பினார்

யாழ்ப்பாணம் ஏப். 28

மந்திகை மருந்துவ மனையில் இதுவரை கடமையாற்றிய பிரெஞ்சு வைத்திய குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் அயன்காரோ கடந்த 26 ஆம் திகதி நாடு திரும்பினார்.

அவரின் இடத்துக்கு அமெரிக்க நாட்டு வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-7)

### இன்று

ஸ்ரீ சிவமுருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 90 ஆவது ஜெயந்தி இன்று 28 ஆம் திகதி உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறும்.

(க)

★ ★ ★

வலயம் 1 கல்வித் திணைக்களத்தை சேர்ந்த முதன்மை ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் இன்று 28 ஆம் திகதி காலை 9. மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். (க)

### ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஏப். 28

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை சனிக்கிழமையும் இடம் பெறும்.

(ஐ-14)

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும். நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரமணித் தேரின் வெள்ளோட்ட விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. (ஐ-14)

### சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஏப் 28

மே நாளில் கடமை புரிவது தொடர்பாக சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவைச் சேர்ந்த பாடசாலை, தனியார் அங்கத்தவர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதேச ஆணையாளர் கேட்டுள்ளார்.

[இ-4]


கலை வர்த்தக கல்லூரி

**C·C·A**

வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம்.

**A/L 97**

கலை வர்த்தக வகுப்புக்கள்

சனி, ஞாயிறு

ஆரம்பம்:

**29·04·1995**

சனி காலை 8-00 மணி

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

(1) மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையினால் முற்கூட்டியே பதிவு செய்து இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

நிர்வாகம்.

[சி-1314]


# மத்திய வங்கிக்கு ஆட்சேர்ப்பு பரீட்சை

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஏப். 28

இலங்கை மத்தியவங்கி, பதவிநிலை அலுவலர் வகுப்பு மற்றும் எழுது வினைஞர்கள், உதவிக்காசாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

பதவிநிலை அலுவலர் வகுப்புக்கு பட்டதாரிகளும்—

எழுது வினைஞர், உதவிக்காசாளர் பதவிகளுக்கு ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் ஒரே தடவையில் 6 பாடங்களில் திறமைச் சித்தியுடன் உயர்தரத்தில் 3 திறமைச் சித்தி உட்பட 4 பாடத்தில் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பதவி நிலை அலுவலர் வகுப்பு விண்ணப்பதாரிகள் விண்ணப்ப இறுதித் திகதியில் 35வயதுக்குமேற்படாதவராகவும்—

எழுது வினைஞர், உதவிக்காசாளர் பதவிக்கான விண்ணப்பதாரிகள் 18 — 30 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பொது விவேகம்; புரிந்து கொள்ளும் ஆற்றல், எண்கள் உளசார்பு வேகம், பொது வினாத்தாள் ஆகிய பரீட்சைகளின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு தினம் மேமாதம்25ஆம்திகதியாகும்.

இது தொடர்பான மேலதிகவிவரங்களை இல 15, இரண்டாவது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள உதயன் விளம்பர பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம.

[ஐ-14]

# அரச ஊழியரின் சம்பளம்: ஆராய 7 பேர் அடங்கியகுழு

கொழும்பு, ஏப். 28

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக ஆராய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பளத் திட்டங்களை ஆராய்ந்து, அது தொடர்பான விதப்புரைகளை இந்த ஆணைக்குழு வழங்கும்.

7 பேர் கொண்ட இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி அமைத்துள்ளார்

இந்த ஆணைக்குழுவின் தலைவராக இளைப்பாறிய அமைச்சுச் செயலாளர் திரு பி.சி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-5)

# உடல் ஆரோக்கியத்துக்கு விளையாட்டு அவசியம்

## காவல்துறைப் பொறுப்பாளர் உரை

மனவலிமையையும், அமைதியையும் உடல் ஆரோக்கியத்தையும் வளர்ப்பதற்கு உதவும் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் இன்று பெரிதும் அவசியம் ஆகின்றன

வரணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒரு நேர்மையான, ஒழுக்கம் நிறைந்த, கட்டுக் கோப்பான சமுதாயமாக எமது எதிர்கால சமுதாயம் உருவாவதற்கு இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் ஏ துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழா முடிவில் திருமதி வனிதா நடேசன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

[க-14]


## அச்சுக் கோர்ப்பாளர் தேவை

உடனே நேரில் வருக

**ஆனந்தா அச்சகம்**
226, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(சி-1339)



## கண்டீர்களா?

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நீர்வேலி, கோப்பாய்ச் சந்தி — கைதடி ஊடாகக் கொலி செல்லும் போது, பல்கலை மாணவனின் பெறுமதியுடைய ஆவணங்கள் அடங்கிய பிரயாணப் பை தவறிவிட்டது. எடுத்தவர்கள் கருணை உள்ளத்துடன் தந்து உதவவும். சன்மானம் தரப்படும். தர்சினி இலத்திரனியக் கூடம், கண்டி வீதி, கொடிகாமம்.

(36438)



## முக்கிய அறிவித்தல்

யாழ். வணிக ஊழியர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 29-4-95 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும். ஆகவே அனைத்து வர்த்தக ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்
வணிக ஊழியர் கழகம்.
யாழ்ப்பாணம்.

(சி/1106)



## பொருளியல் மாணவர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

**A/L - 97**

எனது வகுப்புக்கள் பின்வரும் இடங்களிலேயே நடைபெறும்.

**C. C. A.** யாழ்ப்பாணம். & **நிரு** கோண்டாவில்.

குறிப்பிட்ட சில பிரிவுகள் மட்டுமே ஆரம்பிப்பேன் என்பதால் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்.

பொருளியல்: திரு. உதயன்

(சி-1095)



வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்

## கேள்வி கோரல்

மேற்படி திணைக்களத்திற்கு வீதி அமைப்பதற்குத் தேவையான கீழ்க்காணும் பிரமாணங்கள் கொண்ட கல்லு தேவைப்படுகின்றது.

2'' கல்லு
3/4'' கல்லு
4'' கல்லு

மேற்படி கல்லை விநியோகிக்க விரும்பும் ஒப்பந்தகாரர்கள் தங்களால் மாதாந்தம் விநியோகிக்கக் கூடிய கல்லு அளவுகளையும் அதன் விலைகளையும் எனது காரியாலயத்திற்கு 16-05-1995 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இக்கல்லுப் பரிமாணங்களைப் பெறக்கூடிய கல்லு உடைக்கும் இயந்திரங்கள் அமைந்துள்ள இடவிவரங்களும் தரப்படல் வேண்டும்.

சே. இராஜேஸ்வரன்,
பிரதான பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி-1099]



சிவமயம்

## 31-ம் நாள் நினைவுகளில்

புலர்வு: 20 — 06 — 1981



மறைவு: 29 — 03 — 1995

**செல்வன் பரராஜசிங்கம் ஜயதீபன்**

(மாணவன், சென்பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு)

நெஞ்சு உனை நினைப்பதில்லை.
மைந்தே
நின்நினைவு ஒழிந்தாலே
நினைக்கவொரு வேளைவரும்
உன் உயிர் துறந்து உடல்பிரிந்து
எங்கள் உடலினிலே நீ கலிந்து
ஈருயிராய்யானோமே... நீ
இல்லையென்றுரைப்போமோ
ஈசனவன் சேவடியில்
வாச மலர் நீ சேர வணங்குகின்றோம்.

நேசம் மிகு குடும்பத்தினர்

63, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

(36437)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கே எடுத்துவரும் பொருள்கள் அனைத்துக்கும் அனுமதி தேவை

## பாதுகாப்பு இணைப்புக்குழு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 28
உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடக்கே அனுப்புவது தொடர்பாக கடந்த காலத்தில் ஐ. தே. க. அரசு கடைப்பிடித்த நடைமுறைகள் கடந்த வாரம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

வடபகுதிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கப்பல் அல்லது லொறி மூலமாக அனுப்ப கடந்த அரசாங்கம் அமுல் செய்த நடைமுறையை புதிய அரசு பதவிக்கு வந்ததுடன் மாற்றி– கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருந்தது.

கடந்த 19ஆம் திகதி மீண்டும் மோதல் ஆரம்பித்த பின்னர் பழைய நடைமுறையை பாதுகாப்பு இணைப்புக்குழு அமுலுக்கு கொண்டுவந்துள்ளதாக தெரியவந்தது.

தடை நீக்கப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பொருள்களாக இருந்தால் என்ன சகல பொருள்களையும் எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதி கண்டிப்பாகத் தேவை என்று பணிக்கப்பட்டுள்ளது.

பொருள்களுக்கு அனுமதி வழங்குவதில் பாதுகாப்பு இணைப்புக்குழு கடும் போக்கை கடைப்பிடிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-3)

## தேயிலை உற்பத்தியாளர் மாநாடு

கொழும்பு ஏப். 28
உலகின் முக்கிய தேயிலை உற்பத்தி நாடுகளின் பிரதிநிதிகளின் இரண்டு நாள் மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

இவர்கள் முதன் முறையாக தேயிலை உற்பத்தியாளர் அமைப்பு ஒன்றை தோற்றுவிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-6)

## வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ். விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ் மாவட்ட நிலைமைகளை நேரில் அவதானிக்க இங்கு வருகை தரவிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது விஜயத்தை திடீரென ஒத்திவைத்துள்ளதாகத் தெரிய வந்தது.

எதிர்வரும் சனிக்கிழமை இவர்கள் யாழ். வருவதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழுவின் ''சிடான்ஸர்'' கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருந்தனர்.

அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது விஜயத்தை ஒத்தி வைத்துள்ளதால் ''சிடான்ஸர்'' கப்பல் அன்றைய தினம் ஒரு தொகுதி பொருள்களுடன் மட்டும் வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-3)

## "லைற்" இன்றி வாகனம் ஓட்டாதீர்

யாழ்ப்பாணம், ஏப் 28
இரவில் ''லைற்'' இன்றிச் செல்லும் மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் வாகனங்களை வழிமறித்துப் பிடிப்பதில் தமிழீழக் காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக யாழ் நகரப் பகுதியில் லைற் இன்றி வரும் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. வாகனம் செலுத்தி வருபவர்களிடம் சிறு துண்டு ஒன்று வழங்கப்படுகின்றது. அடுத்த நாள் காலையில் அதைக் கொண்டு சென்று காவல்துறையின் நகரப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் தண்டப்பணம் செலுத்தும்படி அவர்கள் பணிக்கப்படுகின்றனர்.

## சத்துணவு திட்டம்

தொல்புரம் கிழக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் சிறுவர் பாடசாலையில் மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்று எதிர்வரும் மே மாதம் தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

'கோமாரி' கப்பலில்

# மண்எண்ணெய் ஏற்ற கப்பல் கம்பனி மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28
வடக்கே 'கோமாரி' கப்பலில் மண்எண்ணெய் ஏற்றிவர ''வர்த்தகக் கப்பல் கம்பனி மறுப்பு தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் விற்பனை முகவர்கள் ஒரு தொகுதி மண்எண்ணெய் பரல்களை 'கோமாரி' கப்பல் மூலம் எடுத்துவர யாழ் அரச அதிபர் ஏற்பாடு செய்திருந்தார்.

அதன்படி இக்கப்பலில் கடந்த மாதம் எரிபொருள் முகவர்களுக்கு 6ஆயிரம் பரல் மண்எண்ணெய் ஏற்றிவரப் பட்டது.

பின்னர் இக்கப்பல் இங்கிருந்து திரும்பும் போது திருமலை சென்று மா ஏற்றிக் கொண்டு கொழும்பு சென்றதாகவும்—

அந்த மாவின் பெரும்பகுதியில் மண்எண்ணெய் கலந்ததால் பழுதடைந்தாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து— 'கோமாரி' கப்பலில் இனிமேல் மண்எண்ணெய் ஏற்ற அனுமதிப்பதில்லை என்று சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனி முடிவு செய்தாக அறிய வந்தது.

மண்எண்ணெய் எடுத்துவர இங்கிருந்து சென்ற முகவர்கள் இதனால் ஏமாற்றமடைந்தனர். [ஐ-3]

## சுதந்திர பறவைகள் நாளை வரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான ''சுதந்திரப் பறவைகள்'' இதழின் இம்மாத இதழ் நாளை சனிக்கிழமை வெளிவரவுள்ளது.

''பெண் கடற்கரும் புலிகளின் மற்றுமோர் மகத்தான சாதனை'' என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவரவுள்ள அந்த இதழில் கட்டுரைகள், நீண்டகவிதைஉட்பட பல வழமையான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. (ஐ)

## சந்திரிகா நாளை நாடு திரும்புவார்

கொழும்பு, ஏப்ரல். 28
உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாரிஸ் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அங்கிருந்து நாளை நாடு திரும்ப உள்ளார். (ஐ-5)

## புதிய தொழில்நுட்ப அதிகாரி

யாழ்ப்பாணம், ஏப். 28
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலக தொழில் நுட்ப அதிகாரியாக திரு சைமன் பேக்கர் பதவிபேற்றுள்ளார்

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இவர் முன்னர் றுவாண்டா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் பணியாற்றினார். [ஐ-3]

## ஒரு லட்சம் ரூபா லஞ்சம் வாங்கிய பொலீஸ் அதிகாரி

### ஆணைக்குழுவினரிடம் சிக்கினார்

கொழும்பு. ஏப். 28
ஒரு லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட பிரதம பொலீஸ் அதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல் விசாரணைக் குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை பொலீஸ் நிலையத்தின் விசேட குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரியாக இவர் பணியாற்றி வந்தார்.

சட்ட விரோதமான சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை விலக்கிக் கொள்வதற்கு இவர் ஒரு லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

வறியோர் மற்றும் மாணவர்களுக்கான

# உணவு முத்திரை திட்டம் இம்மாதத்துடன் நிறுத்தம்?

வறியோருக்கான உணவு முத்திரை. மாணவர் உணவு முத்திரை என்பனவற்றை வழங்கும் திட்டம் யாழ் மாவட்டத்தில் இம்மாதத்துடன் நிறுத்தப்படலாம் எனத் தெரியவந்துள்ளது

வறுமை நிவாரணத் திணைக்களத்தை இம்மாத இறுதியுடன் மூடுவது என்ற அரசின் திட்டத்தை அடுத்தே அந்த திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் முத்திரைகள் வழங்கும் வேலைகளும் கைவிடப்பட விருப்பதாக அறிய வந்தது.

இவ்வருடத்துக்கான மாணவர் உணவு முத்திரையும் வறியோர் உணவு முத்திரையும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த முத்திரைகளில் ஏப்ரல் மாதம் வரையான முத்திரைகளை மட்டுமே பயன் படுத்துமாறும் —

எஞ்சிய முத்திரைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும்— வறுமை நிவாரண ஆணையாளர் மாவட்ட செயலகங்களை கேட்டுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இந்த திட்டங்களுக்குப் பதிலாக ''சமுர்த்தி'' திட்டம் அமுலாகும் என அரசு அறிவித்துள்ள போதும் யாழ். மாவட்டத்தில் அத்திட்டம் அமுலாகுமா என்பது கேள்விக் குறியாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வறுமை நிவாரண திணைக்களம் மூடப்படும் என்ற தகவல் அடங்கிய சுற்று நிருபம் கொழும்பில் வெளியான போதும் அது இன்னமும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (ஐ-3)

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு

# பொது மக்களின் ஒத்துழைப்பை பொலீஸ்மா அதிபர் கோருகிறார்

கொழும்பு, ஏப்.28
நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொதுமக்கள் பொலீஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

—பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா முன்கண்டவாறு பொது மக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இனந்தெரியாத வெளியாட்களின் நடமாட்டம் குறித்தும்,விடுதலைப் புலிகள்குறித்தும் பொலீஸாருக்கோ அல்லது ஆயுதப் படையினருக்கோ உடனடியாக தகவல் கொடுக்குமாறும் மக்களை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தேவையற்ற அல்லது அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடுகளில் புகலிடம் கொடுக்க வேண்டாம் என்றும்—

உறவினர்கள் வீட்டில் வந்து தங்குமிடத்து உடனடியாக அதுபற்றி பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். [ஐ-5]

# கண்டியில் பலத்த பாதுகாப்பு! பொலீஸார் திடீர் சோதனை!!

கடந்த சில நாட்களாக கண்டி பொலீஸ் பிரிவைச் சேர்ந்த சில பகுதிகளில் பொலீஸார் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அடையாள அட்டைகள் இன்றி வெளியார் எவரும் வீடுகளில் தங்கி உள்ளனரா என்பதையும்—

சந்தேகத்துக்கு இடமான நபர்கள் தங்கியுள்ளனரா, ஆபத்தை விளைவிக்கும் பொருள்கள் உள்ளனவா என்பதையும் அறிந்து கொள்வதற்காகவே சோதனை நடத்தப்படுவதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் அம்பிட்டிய, அணிவத்த, ஹாதுல்பொல, தெய்யனவெல்ல ஆகிய இடங்களிலேயே சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில்—

கடந்த திங்கள் காலை கண்டி ரயில் நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்களைத் தேடி பொலீஸார் சோதனை நடத்தினர்.

பயணிகளின் உடைமைகளும்,பொதிகளும் சோதனை செய்யப்பட்டன.

தற்போதுள்ள நிலைமை காரணமாக பொலீஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் கண்டியில் பலப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

பேராதனை கண்டி — அம்பிட்டிய, தென்னக்கும்புர ஆகிய இடங்களில் வீதிகளில் வீதித் தடைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# காலத்தின் தேவை கருதி மே நாளில் அணி திரள்க!

தமிழீழத்தில் வாழும் மக்களின் நிலை பற்றி உலக நாடுகள் மிகவும் விழிப்பாக அவதானிக்கும் காலம் இது. இலங்கையில் ஒரு புறத்தில் ஓர் இன மக்கள் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, உயிர்வாழ்வதற்கான அடிப்படை வசதிகளற்று, இருந்த நிலத்தை இழந்து, வாழ்ந்த உறைவிடத்தை இழந்து, உயிர்வாழ்வதற்கான உணவுப் பண்டங்கள் கிடைக்காத நிலையில் தமிழீழ மண்ணில் பல பெறுமதி மிக்க இழப்புகளின் மத்தியிலும் இலட்சிய உணர்வோடு பல அரிய அர்ப்பணிப்புகளைச் செய்து கொண்டு வாழும் மக்களைக் கொண்ட தமிழீழ நாடு. இது ஒரு தனி நாடு.

இந்த நாட்டில் ஒரு மேதினம், இம் மேதினத்தின் முக்கியத்துவம் சகலரும் அறிந்ததே. இந்த மண்ணில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் சாதி, மதம், பால், முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடின்றி அனைத்து ஒடுக்குமுறைகளுக்குள்ளான நிலையில் இருந்து விடுபட ஒரே கொடியின் கீழ் அலை அலையாக அணி திரண்டு எம்மை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கை அரசுக்கும், உலக நாடுகளுக்கும் எமது தேவையையும், எமது உணர்வுகளையும் வெளிக்காட்டுவோம்.

சமாதானப் பேச்சுக்கள் பலவற்றைக் கண்ட மக்களாகிய நாம் அதற்கு ஆதரவானர்களே. ஆனால் இப்பேச்சின் போர்வையில் மிகப் பாரிய தாக்கத்தை இன்னமும் வேற்று நாட்டவர் மேற்கொள்ள இடமளிக்க முடியாது. இதை தெளிவாக எமது மேதினம் மூலம் தெரிய வைப்போம்.

எமது வளம் நிறைந்த நாட்டில் எமக்கான தாயகத்தை நாமே அமைப்போம். மூலவளமும், மூலதனமும், மூளை வளமும் நிறைந்ததுதான் தமிழீழ பிரதேசம். அதை முறையாக பயன்படுத்தி அனைத்து ஒடுக்குமுறையையும் உடைத்தெறிவோம்.

ஒரு தலைவனின் பாதையில் ஒரே கொடியின் கீழ், ஒரு நாட்டு மக்கள் அனைவரும் திரண்டெழுந்து உணர்வோடும், உரிமையோடும் மேநாளைக் கொண்டாடும் நாடு உலகிலே எமது நாடாகத்தான் இருக்க முடியும்.

இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் கலந்து தமக்குரிய பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட்டு உரிமைகளை வென்றெடுக்க அலை அலையாக, அணி அணியாக மேதின நன்நாளில் ஒன்றுகூடி எரிமலை என எமது பிரச்சினைகளை உலக நாடுகளுக்குத் தெரிய வைக்க வேண்டும். இதுவே எமது இக்கால தேவை என்பதை உணர்ந்து இந்நிகழ்வை ஒரு வரலாறு படைக்கும் நிகழ்வாக மாற்றிக்கொள்வோமாக.

வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவு இயக்கங்களின் சமாசம்

## புலிகளின் குரல் வானொலியில்

28 — 04 — 1995
வெள்ளி இரவு

- ★ 8-02 — கலைமஞ்சரி— அறிமுகம் — அறிமுகமாவது விவசாய விரிவுரையாளர் முகந்தசாமி எழுதிய ''ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முகாமைத்துவம்'' என்னும் நூல். சிறுகதை— அ. மதிவதனி எழுதிய ''நீ எனவே நிஜமாக'' கவிதை— ஆர்த்தி எழுதிய ''புதிய பாய்ச்சல்''
- ★ 8-25 — கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய 'கலப்ரினன்ட் நித்தி''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — சமகாலப் பார்வை
- ★ 8-50 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''எமது உற்பத்தியில் வெள்ளைச் சம்பா'' சித்திரம்

29 — 04 — 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — கணநேரக் காவியங்கள்
- ★ 5-30 — மண்ணின் குரல்
- ★ 5-40 — நேயர் கடிதங்கள்
- ★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — நாடகம்
- ★ 6-15 — [illegible] செய்திகள்
- ★ 6-[illegible] — [illegible]

# கொத்துரொட்டி தயாரிப்பதில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

## தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு அறிக்கை

யாழ்ப்பாணம். ஏப் 28
கொத்து ரொட்டி தயாரிக்கும் உணவுச் சாலைகளின் உரிமையாளர்கள் சுகாதாரம் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொத்து ரொட்டி தயாரித்து விற்பனையில் ஈடுபடுவோர் உணவு நிலையங்களுக்கு முன்பாகவும், வீதியோரமாகவும் அவற்றைத் தயாரித்து விற்பனை செய்வது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது இவ்வாறாக வீதியோரங்களில் இவற்றைத் தயாரிப்பதினால் கொத்து ரொட்டியில் தூசிகள் காற்றோடு கலந்து வந்து சேர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன இதனைக் கருத்திற் கொண்டு கொத்து ரொட்டித் தயாரிப்பில் ஈடுபடும் சகல உணவு நிலைய உரிமையாளர்களும் உடனடியாக தமது கொத்து ரொட்டி தயாரிப்பு இடத்தை மாற்றம் செய்து. சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காத நிலையில் அதனை ஆக்குமாறு தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். இதனை மீறுவோர் மீது 1995 ஆம் ஆண்டின் 01 எண் தமிழீழ உணவுச் சட்டத்தின் 01 ஆம் பிரிவின் (02) ஆம் உட்பிரிவின் கீழ் உடல் நலத்திற்கு ஒவ்வாத நிலைமைகளால் உணவை ஆக்கினார் என்ற பேரில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரதிதாசன் விழா

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் புரட்சிக் கலைஞர், பாவேந்தர் பாரதிதாசன் விழா கல்லூரி வைரவிழா அரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 4- 30 மணி முதல் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு மு. பரமேஸ்வரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

விழாவில் ''பாரதி தாசனும் தமிழ்க் கவிதையும்'' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜாவும்—

''பாரதிதாசனும் பகுத்தறிவும்'' என்ற தலைப்பில் திரு. பொன். கணேசமூர்த்தியும் சிறப்புரை ஆற்றுவர். தொடர்ந்து கவியரங்கம், நாடகம் என்பன இடம் பெறும். [ஐ]

## வலி. மேற்கு போஷாக்கு வாரம்

சுழிபுரம், ஏப். 28
வலி. மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு, எதிர்வரும் மே மாதத்தில் போஷாக்கு வார நிகழ்வுகளை நடத்த உள்ளது.

இது தொடர்பாக நாடகம், கூத்து, நடனம், நாட்டிய நாடகம், பாடல், கவிதை ஆகிய போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஐ-5-28]

# திருவைந்தெழுத்துமந்திரம்

சிவபெருமானுடைய மூல மந்திரம் திருவைந்தெழுத்து எனப்படும் நமசிவாய என்பது. சிவனுக்கு வணக்கம் எனப் பொருள்படும். அது ஸ்ரீபஞ்சாட்சரம்எனவும் வழங்கப்படும்.

இந்த மூலமந்திரத்தை உணர்ந்தும் தேவாரப்பதிகங்கள் நான்கு. அவற்றுள்

### ஞானக்கதிர்

ஒன்று சுந்தரமூர்த்தி நாயனாரால் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் தலத்தில் அருளிச் செய்யப்பட்டது.

திருவைந்தெழுத்தை நான் மறந்தாலும் எனது நா மறக்க மாட்டாது என நாயனார் அப்பதிகத்தில் இறைவனிடம் கூறுகிறார். பிரார்த்தனை வேளையில் இறைவன் சந்நிதியில் நின்று மனமுருகிப் பாடுவதற்கு மிகப் பொருத்தமான பாடல் இது.

வேறு ஒருபற்றுமின்றி உனது திருப்பாதங்களையே சிந்தித்து வந்தித்து வந்துள்ளேன். அதனால் பிறவிப் பயனை அடைந்தேன். இனி மேல் பிறவாத நிலையும் பெற்றேன். கல்வியறிவு மிக்கோர் கருதி வழிபடும் திருப்பாண்டிக் கொடுமுடியில் வீற்றிருக்கும் இறைவனே! உன்னுடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தை நான் மறந்தாலும் எனது நா மறக்க மாட்டாது. என நாயனார் உறுதியுடன் கூறுகின்றார். இப்பாடலை நிலம் ஓதி எமது இடர் நிலை நீங்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாத தன்மை வந்தெய்தி னேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லு நா நமச்சிவாய வே

வாசுகி
சிவராமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலலஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

Japan தயாரிப்பு Mitsubishi கார், இந்தியன் தயாரிப்பு Enfield நீர் இறைக்கும் இயந்திரம், Enfield தயாரிக்கப்பட்ட லைட் இஞ்சின் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 102, ஆடியபாதம் வீதி, நல்லூர். நேரம். காலை 10—12 மாலை 4—6 [36427]

அடை வைக்க உகந்த சில்க்கி, பிறாமா, பொலிஸ், சில்வர், பாமாஸ், இனிக் கோழி முட்டைகளும், சகல இனக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: யோ. மாறன், இல. 1, அரவாணன் வீதி, சங்கத்தானை சாவகச்சேரி. (8499)

பாவித்த நல்ல நிலையில் உள்ள Benly Super (நீலம்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. அரவிந்தன், இல. 35/14, வாலையம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம். [36434]

**அலுமாரி விற்பனைக்கு**

புதிய மரத்தால் ஆன அலுமாரி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 15/10 இராமநாதன் வீதி. நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [36430]

**SPOKEN ENGLISH**

விரிவான விளக்கத்துடன் ஆரம்பத்திலிருந்து Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது புதியவர்கள் உடனே சேரலாம். V N. Kandasamy A I B Part I (London, Inter London) Dip - in - English இல 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கும் சமீபத்தில் கொக்குவில் [36 26]

**B A மாணவர்களுக்கு**

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய இந்து நாகரிகத்தில் கலை எனும் ஆய்வு நூல் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக கற்கும் B A மாணவர்களுக்கு உரியது. சொற்ப பிரதிகளே உள்ளன. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (36402)

**வாடகைக்கு தேவை**

சுண்டிக்குளி சந்திக்கும் ஐந்து சந்திக்கும் இடையில் வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M. ராஜன், இல. 70/6, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [36431]

**இந்துசமயம்**

க. பொ. த. உயர்தரம் G.C.E. A/L பத்து ஆண்டுகளுக்கு உரிய வினா - விடைகள் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதியது. துரிதமாக விற்பனையாகின்றன. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (36401)

**நடனம்**

நடனம் வினா-விடை பரதக் கலை தொடர்பான விவரங்கள், சிறுகுறிப்புகள் பரீட்சைக்குரிய வினா-விடைகள் கொண்ட நூல் வட இலங்கை சங்கீத சபைக்கு O/L. A/L வகுப்புக்குப் பயன்படும் வகையில் ஆக்கப்பெற்றது. ஆக்கம்: செல்வி 'நிலா' விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-1310)

## அறஞானக் கல்வி வகுப்புகள்

சுழிபுரம், ஏப். 28

சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் அறஞானக் கல்வி வகுப்புகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன. இவ் வகுப்புகளை மாலை வேளைகளில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஐ-5-28]

## நன்றித்துதி கூறுவோமாக

அன்புத் தெய்வமே இறைவா! குழந்தை யேசுவின் அற்புதத்தினாலும் இறை இரக்கத்தின் கருணையினாலும் எனது மகள் சுகப்பிரசவம் அடைந்து தாயும், சேயும் நற்சுகமே இருக்க அருள் புரிந்ததற்காக நன்றி கூறுகிறோம். அவர் நாமம் புகழப்படுவதாக.

— இறையடியாள்

[36433]

## 45-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சி. ஞானதாஸ்

உசன் மிருசுவிலைச் சேர்ந்த கெற்பேலி கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலராகப் பணிபுரியும்

திரு க. மு சிவகுரு

அவர்களின் அன்பு மகனான

ஞானதாஸ் அவர்கள்

15 — 03 — 1995 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது அஞ்சலியை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

— பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி,
26-04-95. [சி-1089]

மகளிருக்கான

# மனைப்பொருளியலும் கைத்திறனும்

6 மாத கால

## டிப்ளோமா பயிற்சி

* கேக் ஐசிங்
(பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மன்ட் ஐசிங், (F) புறோஸ்ரிங் ஐசிங், (F) பொன்டன்ட் ஐசிங் மற்றும் மாசசினி அலங்காரங்கள் (Sugar Crafting)
* உணவு தயாரித்தல்
(கீழைத்தேச மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், சூப் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் புடிங் வகைகள் தயாரித்தல், மரக்கறிகளை குடைந்து உருவங்கள் செய்தல் மற்றும் உணவை அலங்கரிக்கும் விதம், உணவு மேசை அலங்காரம், உணவு பரிமாறும் முறைகள் என்பன)
* உடை தயாரித்தல்
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள் தைத்தல், மேசை, கதிரை விரிப்புகள், தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
* கை வேலை
(கம்பளி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், கழிவுத் துணி வேலைப்பாடுகள், சுவர் மாட்டிகள், வைக்கோல் வேலை, கடுதாசி நிபன் வேலைகள் செய்தல்)
* பூ வேலை
(கடுதாசியிலும், துணியிலும் மலர்கள் செய்தல், ஸ்ரொக்கிநெற் மலர்கள், (P) பான்சிலே மலர்கள், டிப் இன் மலர்கள், சற்றின் நிபன் மலர்கள், மலர்ச் செண்டுகள் செய்தல்)

- மேற்படி டிப்ளோமா பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரங்கள், இந்து, கிறிஸ்தவ மணப்பெண் ஒப்பனை அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.
- பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை நடைபெறும்.

ஆரம்பம்: **10 — 05 — 1995**

- சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 2-30 மணி வரை நடைபெறும்.

ஆரம்பம்: **14 — 05 — 1995**

## கலாலயா (தொழிற் பயிற்சியகம்)

விக்ரோறியா வீதி,
(மருத்துவமனையின் பின் வீதி)
யாழ்ப்பாணம்.

அரியாலை

## புனித யூதா ததேயு ஆலய பெருவிழா

★ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (30ஆம் திகதி) காலை 7-00 மணிக்கு புனித யூதா ததேயு ஆலய வருடாந்தப் பெருவிழாத் திருப்பலி இடம்பெறும்.

★ சனிக்கிழமை (29ஆம் திகதி) காலை 7-00மணிக்கு முதல் நன்மைத் திருப்பலியும், மாலை 5-30மணிக்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும்.

★ ஞாயிறு (30 ஆம் திகதி) மாலை 7-30 மணிக்கு ''புனித யூதா ததேயு'' நாட்டுக்கூத்து ஆலய முன்றிலில் இடம்பெறும்.

அனைவரையும் இப்பெருநாள் நிகழ்வுகளில் பங்குபற்றி இறையருளை நிறைவாகப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

பங்கு மக்கள், பங்குத் தந்தை.

(36432)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம் 97**

மீண்டும் புதிய பிரிவுகள்

ஆரம்பம்: **29 - 04 - 1995**

காலை 8 - 00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு லோகசிங்கம் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |
| கணக்கியல் | — திரு. கலைச்செல்வன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| புவியியல் | — திரு குணராஜா |
| இந்து நாகரிகம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| இந்துசமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| அரசியல் | — திரு சீலன் |
| வரலாறு | — திரு பிரகலாதன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. சத்தியா |
| கிறிஸ்தவம் | — திரு. வசந்தன் |

அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் முன் கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்.

(சி-1321)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 10 — 1931

மறைவு: 09 — 05 — 1994

அமரர்

### இராசரத்தினம் சத்தியமூர்த்தி

(முன்னாள் நஷனல் அன்ட் கிறீன்லீஸ் வங்கி லிகிதர்)

திதி: 28 — 04 — 1995

தாங்கள் அமரராகி பன்னிரண்டு திங்கள் சென்றாலும் நீங்கள் எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்றீர்கள். உங்கள் ஆறாத்துயரில் வாடி நின்று, என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

செம்பாடு
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(36376)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 15 — 09 — 1930

ஆண்டவன் அணைப்பில்: 08 — 05 — 1994

அமரர்

### தில்லையம்பலம் இரத்தினம்

(கனடா)

திதி: 28 — 04 — 1995

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ''

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சகோதரர்கள்.

வேலணை கிழக்கு
வேலணை - 02

(36410)

## P' நியுசயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன், யாழ்ப்பாணம்.

**97 A/L** கணித-உயிரியல் 2 ஆவது பிரிவு

ஆரம்பம்: **30 - 04 - 1995**
ஞாயிறு

| | |
|---|---|
| ZOOLOGY | — திரு. ஈஸ்வரதாசன் |
| BOTANY | — திரு. பாலா |
| PHYSICS | — திரு. ஜெயசீலன் |
| CHEMISTRY | — திரு. செல்வா |
| | — திரு. மகேஸ்வரன் |
| PURE — APP | — திரு. குணசிங்கம் |

★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-1093]

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**O\L DAY CLASS**

பிரிவு II

ஆரம்பம்: **08 - 05 - 1995**
(திங்கள்)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — திரு மகேந்திரன் |
| தமிழ் | — திரு சிவா |
| சமூகக்கல்வி | — திரு. வேலா |
| ஆங்கிலம் | — திரு. சத்தியமூர்த்தி |
| சமயம் | — திரு ஸ்ரீ |
| சித்திரம் | — திரு. அரவிந்தன் |

(சி/1330)

சமயோசிதமான ஆசிரியத் தெரிவே உங்களை மீட்சிக்குரியவராக்கும்!

## A/L 97

### கணித, உயிரியல் பிரிவுகள்

சனி, ஞாயிறு வகுப்புகள்

பிற்பகல் 2 மணி — 6 மணி

பௌதிகவியல்
திரு. வர்ணம்
இரசாயனவியல்
திரு. தில்லைநாதன்
தாவரவியல்
திரு ஐங்கரநேசன்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தூய/ பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணா

ஆரம்பம்: **29-04-1995**

பிற்பகல் 2 மணி

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

★ அனுமதிகளை முன்கூட்டியே உறுதிசெய்து கொள்ளுங்கள்.

(சி/1078)

## 15th DEATH ANNIVERSARY



In Ever Loving Memory
of Our Dear One

**LUTHER JAMES SELVARAJAH**

Wife - Ranee &

Children - Dushan and Janey

"Selva Giri"
57, Arasady Road,
Jaffna.

(36282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

### பாழுற்ற கிணறு நோக்கியா?

நிரந்தர சமாதானம் உருவாகுவதற்கான கதவுகளை தாம் இன்னும் மூடிவிடவில்லை என்று விடுதலைப் புலிகள் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

சமாதானத்தை அடைய விரும்புவதாகக் கூறும் அரசாங்கம் இதனைச் சாதகமாகப் பயன்படுத்துமா அல்லது அக்கறைப்படாமல் தன்பாட்டிலே செயற்படுமா என்பதனைத் தெரிந்துகொள்ள இலங்கை மக்கள் அனைவருமே ஆர்வமாக இருந்தார்கள்.

பாரிஸ் மாநாட்டுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத் தொலைக்காட்சியான ரூபவாஹினிக்கு இப்போதைய அரசியல் நிலை பற்றி விசேட செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார்.

சமாதானக் கதவுகளை மூடவில்லை என்று விடுதலைப் புலிகள் கூறுவதைத் தான் நம்பவில்லை என்றார் அவர். புலிகள் கூறுவதில் நம்பிக்கை கொள்ளாதவர் சமாதானப் பேச்சுகளுக்கு அவர்களை அழைக்கமாட்டார் என்றே கொள்ளலாம். பிற நெருக்குதல்களுக்காக, பெயருக்கு, புலிகளைப் பேச்சுக்கு அழைத்தாலும்கூட அது வெற்றி அடையும் சாத்தியமிருக்காது.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் காண்பதில் வெற்றி என்பது, அதில் சம்பந்தப்பட்ட இருதரப்பாரும் ஒருவர் மீது மற்றவர் வைக்கும் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது.

எனவே சந்திரிகா வெளியிட்டிருக்கும் கருத்து சமாதானப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்பதாகக் கருதப்பட வேண்டியதே.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்றால், சமாதானத்தை அடைவதற்கு தாம் கையாளப் போகும் அணுகுமுறை என்ன என்பதையும் அவர் கூறவில்லை.

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுக்கான அரசின் திட்டம் எது என்பதனை முடிவு செய்ய முடியாத நிலையில் உள்ளது போலவே, அதற்கான அணுகுமுறை எது என்று தீர்மானிக்க முடியாதவராகவும் சந்திரிகா இருக்கிறாரா?

சமாதானத்தை அடையப் போவதாகக் கூறும் அவர், தம் வசம் நிச்சயமாக ஓர் அணுகுமுறையை திட்டமிட்டு வைத்திருப்பார். அந்த அணுகுமுறை இராணுவத் தீர்வாகவே இருக்கும் என்று நம்பலாம்.

ஆனால் அவர் அதனை வெளிப்படையாகக் கூறுவதற்குத் தயங்குகிறார். அப்படிக் கூறினால் உள் நாட்டில் எதிர்ப்பும், வெளிநாட்டில் கெட்ட பெயரும் வரும் என்பதால் தமது அணுகுமுறையை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை!

விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது ஐ. தே. க. அரசின் வழிமுறையைப் பின்பற்றுவது என்பது ஒரு புறமிருக்க — போரை நடத்தி தமிழ் மக்களை இன அழிப்புச் செய்யும் பெரும் திட்டமுமாகும். சமாதானத்தை அடைவதற்காக தமிழ் மக்களும் தமக்கு வாக்களித்தார்கள் என்று பெருமையோடு கூறும் சந்திரிகா, அவர்களை அழிக்கும் அணுகுமுறையைத் தேர்ந்து எடுப்பாரானால் அது மிகப்பெரும் துரோகமாக அமையும்.

புலிகளை ஓரங்கட்டுவது, இராணுவத் தீர்வு என்பன கடந்த பன்னிரண்டு வருடங்களாக வெற்றி தரவில்லை; நடைமுறைச் சாத்தியமாகவில்லை என்ற அனுபவத்தை — படிப்பினையை — சிரணித்துக் கொள்ள மறுக்கிறார் சந்திரிகா. அதன் மூலம் நாட்டை மீண்டும் பேரழிவுக்குள் இட்டுச் செல்லப் போகிறார்.

தெற்கில் முந்திய அரசியல் குருடர்கள் சென்ற அதே இருட்டான பாதையில் நடந்து, அதே பாழடைந்த கிணற்றில் விழுவதற்கு சந்திரிகா கங்கணம் கட்டும் போது யார் என்ன செய்ய முடியும்?

# கிழக்கு காடுகளில் அகோர குண்டுவீச்சு!

## படை நடவடிக்கை தொடர்கிறது

கொழும்பு, ஏப். 28

கிழக்கில் காட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக படையினர் கடந்த செவ்வாயன்று ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காட்டுப் பகுதிகளில் கடந்த இரு நாட்களாக கடும் விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் காட்டுப்பகுதி முகாம்களை அழிக்கும் நோக்கில் விமானங்களின் உதவியுடன் இந் நடவடிக்கையைப் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரிடி. சில்வா தெரிவித்தார்.

தமிழ் மக்களின் ஆதரவை இழக்காத வகையில் படையினர் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

காட்டுப் பகுதிகளில் உள்ள முகாம்கள் மீது விமானப் படையின் உதவியுடன் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

காட்டுப் பகுதியில் கடந்த இரு நாட்களாக விமானங்கள் பலத்த குண்டு வீச்சினை நடத்தியதாக கிழக்கில் இருந்து கொழும்புக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் காட்டுப் பகுதிகளை அண்டிய கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

கட்டுமுறிவு, ஆண்டான்குளம் பகுதிகளில் இருந்து ஏற்கனவே அதிக எண்ணிக்கையான தமிழ் குடும்பங்கள் வெளியேறி உள்ளன.

இதேவேளை —

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ய வேண்டாம் என்று பொது மக்களைப் படையினர் எச்சரித்துள்ளனர். (ஐ-5)

### மண்டைதீவில் தொழிலுக்கு சென்ற

## 3 மீனவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 27

மண்டைதீவை அண்டிய கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற 3 மீனவர்களைக் காணவில்லை. திங்களன்று இரவு 7 மணிக்கு புறப்பட்ட மீனவர்கள் புதன் மாலை வரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டிருக்கலாம் அல்லது கைது செய்யப்பட்டிருக்கலாமென மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதனன்று வடமராட்சி கடலில் மீனவர்களின் இரு படகுகள் கடற்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன. 4 மீனவர்கள் இதில் காணாமல் போயினர். கடந்த ஞாயிறன்று வல்வைக்கடலில் 3 மீனவர்கள் கடற் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

கடந்த 19 ஆம் திகதிக்குப் பின் யாழ் மாவட்டத்தில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டும் காணாமற் போயுமுள்ளனர்.

## மீனவர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஏப். 28

மாலைதீவில் விடுவிக்கப்பட்ட 13 இலங்கை மீனவர்கள் 25 ஆம் திகதி தாயகம் திரும்பியுள்ளனர்.

மாலைதீவு கடற்பரப்பில் மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இவர்கள் கடந்த வருடம் மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளிவிவகார அமைச்சும் கடல் தொழில் உயிரியல் வள அமைச்சும் மாலைதீவு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தன. (ஐ-14)

## நிவாரண பொருள்களுடன் 'லங்கா முடித' வருகிறது

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''லங்காமுடிதா'' கப்பல் நாளை மறுதினம் சனிக்கிழமை பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி, சீனி, பருப்பு பால்மா வகை மற்றும் உணவுப் பொருள்களுடன் இக் கப்பல் இன்று கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப்புறப்பட விருப்பதாக நேற்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்தது.

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களே இக் கப்பலில் எடுத்து வரப்படுவதாக தெரியவந்தது.

இதே வேளை— பருத்தித் துறையில் பொருள்களை இறக்கி முடித்த 'குமண' கப்பல் நேற்று மாலை கொழும்பு திரும்பியது. (ஒ-7)

## சாரணருக்கு அழைப்பு

மே தினத்தன்று சேவையாற்ற வசதியாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள், திரிசாரணர்கள், கடல் சாரணர்கள் அனைவரையும் அன்றைய தினம் பூரண சீருடையுடன் பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக்கல் லூரியில் சமூகமளிக்குமாறு மாவட்ட சாரண ஆணையாளர் திரு. இ.மகேந்திரன் கேட்டுள்ளார்.

### தொடராகப் பல கொலைகள் புரிந்த

## ஓட்டோ சங்கர் தூக்கிலிடப்பட்டார்!

புதுடில்லி, ஏப். 28

ஆறு பேரை படுகொலை செய்த குற்றவாளியான தமிழகத்தைச் சேர்ந்த ''ஓட்டோ சங்கருக்கு'' சேலம் மத்திய சிறைச்சாலையில் நேற்றுக் காலை 5-40 மணியளவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஆறு பேரை படுகொலை செய்தார் என்று இவர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் முடிவில் செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்றம் ''ஓட்டோ'' சங்கருக்கு மரண தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கியிருந்தது.

பின்னர் சென்னை உயர் நீதி மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் அத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

இது தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு அவர் எழுதிய கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டது.

அதனை அடுத்து நேற்று அவர் தூக்கிலிடப்பட்டார் காலை 7 மணியளவில் அவரது உடல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கின் மற்றொரு குற்றவாளியான ''ஓட்டோ'' சங்கரின் மைத்துனர் ஒருவருக்கும் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. [ஐ-5]

### ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம்:

## 6 அரச அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகள் ஆறு பேருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் நேற்று முன்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்,

சம்பந்தப்பட்ட இந்த அதிகாரிகள் தங்களது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உரிய கவனம் செலுத்தத் தவறி விட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ராஜீவ் கொலை தொடர்பான ஜெயின் குழுவின் விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### மீண்டும் சண்டை மூண்டதால்

## இக்கட்டான நிலையில் சந்திரானந்த டி சில்வா

கொழும்பு, ஏப். 28

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு முறிவடைந்து மீண்டும் சண்டை தொடங்கியிருப்பது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்தடி சில்வாவை இக்கட்டான நிலைக்குள் மாட்டியுள்ளதாக ''சண்டே லீடர்'' தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் பதவியை மிகுந்த தயக்கத்துடன் அண்மையில் பொறுப்பேற்றவர் சந்திரானந்த டிசில்வா.

முன்னாள் தேர்தல் ஆணையாளராக பணியாற்றிய அவர் ஒரு இருதய நோயாளி ஆவார்.

சிவிலியன் ஒருவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்க வேண்டும் என்ற அரசின் விருப்பத்தை ஏற்று சமாதான காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகக் கடமைகளை மட்டும் அவர் இதுவரை கவனித்து வந்தார்.

பதவியேற்ற நாள் முதல் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்துக்கு அவர் ஒரு தடவை கூட செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலைமை மாறி விட்டதால் அவர் என்ன செய்யப் போகிறார் என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## தமிழ் இசை உரை அரங்கில்

யாழ்ப்பாணம், ஏப் 28

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான மகோற்சவத்தை ஒட்டி இடம் பெற்று வரும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை 10 ஆம் திருமுறை இடம் பெறும்.

இசையாளராக செல்வி இ. விஜயலக்ஷ்மியும் உரையாளராக திரு சிவகாலிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-14)

## இந்து பத்திரிகை கண்டனம்

கொழும்பு, ஏப்ரல். 28

வடபகுதி மீது இலங்கை அரசு மீண்டும் பொருளாதாரத் தடை விதித்தமையை இந்தியாவின் பிரபல பத்திரிகையான ''இந்து,, அதன் ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்துள்ளது. (ஐ-5)

## மேநாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 28

தபால்,தொலைத் தொடர்பு மின்சார சபை, காப்புறுதி பிரிவு ஊழியர்களுக்கான மேதினக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-14)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

கணக்குப்பதியுநர் தரம் 2 இல் உள்ளவர்களை தரம் 1க்கு பதவி உயர்த்துவதற்கான தகுதித் திறன் பரீட்சை எதிர்வரும் யூன் மாதத்திற்கு பிற் போடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்தாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## லண்டனில் சிறிமாவுக்கு சிகிச்சை

லண்டன், ஏப். 28

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த சனிக்கிழமை லண்டன் சென்று சேர்ந்த சில மணித்தியாலங்களிலேயே கிங்ஸ் கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் சில தினங்களில் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளது.

# விடுதலைப்புலிகள் சக்திவாய்ந்த அமைப்பாக உருவெடுத்ததின் யதார்த்தத்தை உணர்வது அவசியம்

## பேச்சிலிருந்து விலகுவது அவர்களின் சொந்தவிடயம்

*சமாதானக் கதவுகளைத் தாம் மூடவில்லை என்று விடுதலைப்புலிகளும் -*

*விடுதலைப் புலிகள் படையினர் மீது நடத்தும் தாக்குதல்களை நிறுத்தினால் பேச்சுவார்த்தையை மீளத் தொடங்குவது குறித்து ஆராயலாம் என்று அமைச்சர் ரத்வத்தையும்—*

*தெரிவித்த நிலைபாடுகள் குறித்து ''மேர்ஜ்'' அமைப்பின் இயக்குநரும் ஜனநாயக சமாதான இயக்கப் பிரமுகருமான எஸ். பாலகிருஷ்ணன் நேற்று முன்தினம் வழங்கிய பேட்டியின் தொகுப்பு இது.*

''சமாதானத்துக்கான கதவு திறந்தே இருக்கின்றது'' என்று விடுதலைப்புலிகள் சர்வதேச அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் —

''விடுதலைப் புலிகள் தாக்குதலை நிறுத்தினால் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து அரசு ஆராயும்'' என்ற அறிவிப்பு அமைந்துள்ளது.

சமாதானத்துக்கான நடைமுறைகளுடன் இந்த அறிக்கை, அறிவிப்புகளை ஆராயும்போது முரண்பாடான தன்மையைக் காண முடிகிறது.

சமாதானம் மக்களுக்கா? அல்லது புலிகளுக்கா? என்றதொரு கேள்வி எழுகின்றது.

உண்மையில் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பின் உருவாக்கமோ, அல்லது தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய ஒரு நிலையோ —

இந்த நாட்டில் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப் பட்டதன் விளைவாகவும் —

தமது உரிமைகள் மறுக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் உரிமைகளுக்காக நடத்திய ஜனநாயக ரீதியான போராட்டங்களை ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கப் பட்ட அரசுகள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாகவும் — தான் தோற்றின என்ற அடிப்படை யதார்த்த நிலைமைகளை புரிந்து கொண்டு நோக்க வேண்டும்.

### அரசியல் தீர்வை வெளியிட வேண்டும்

இந்த நிலையில் அரசுக்கு முக்கிய கடமை இருக்கிறது. இனவாதப் பிரச்சினையை யதார்த்த ரீதியாக உணர்ந்துள்ள அரசின் ஒரு தலைவராகத் தான் ஜனாதிபதி சந்திரிகாவை தமிழர்கள் நோக்குகிறார்கள்.

அந்த அடிப்படையில் அவரது கடந்த கால அரசியலோடு ஒப்பிடும் போது உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பூர்வமான தீர்வு என்ன என்பதை அரசு வெளியிடுவதன் மூலம் தான் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என நான் கருதுகிறேன்.

சந்திரிகா அரசு பதவிக்கு பந்தவுடனேயே கடந்த சில மாதங்களாக ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது

இந்த அரசாங்கத்தை மிக ஆரவாரமாக புலிகள் வரவேற்றனர்.

சந்திரிகாவின் வெற்றியும், அதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பாக ஏற்பட்ட உணர்வலைகளும் மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பை மிகத் தெளிவாக வெளிக்காட்டியது.

அந்த உணர்வலைக்கு எதிராக செயற்படக்கூடிய நிலையில் விடுதலைப் புலிகள் இல்லை என்பதும், மறுபுறத்தில் சமாதானத்துக்கான தீர்வை முன்வைக்கும் காலகட்டத்தில், சமாதான நடைமுறையிலே நிச்சயமாகப் பங்குபற்றவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பும்தான் அவர்களை அரசை வரவேற்க வைத்தது எனலாம்.

### போர் நிறுத்தத்தை முதலில் கேட்டவர்கள் விடுதலைப் புலிகளே

போர் நிறுத்தத்துக்கான முதலாவது கோரிக்கையை விடுத்தவர்களுமாகவும் விடுதலைப் புலிகளே இருக்கின்றனர்.

அமைப்பினரை பேச்சுவார்த்தை மேசையில் இருத்தி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லாமல்போனது ஓர் துர்ப்பாக்கியம் என்றே கூறவேண்டும்.

சந்திரிகாவின் நேர்மை குறித்து சந்தேகத்தை நான் கிளப்பவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நேர்மை நிறைந்த கடமைப்பாடு அவருக்கு இருக்கின்றது.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விதம், பேச்சு நடத்துவதற்கு தேவையான நிபுணத்துவம் இல்லாமை போன்ற விடயங்களே பேச்சுக்கள் இப்போதைய நிலையை அடைய முக்கிய காரணிகளாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினை, விடுதலைப் புலிகள் தொடர்பான ஒரு சரியான புரிந்துணர்வு என்பன இருந்ததா? போன்ற பல்வேறு குறைபாடுகளும் பேச்சு முறிவடையக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

கடந்த 10 வருட காலத்துக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த இனவாத யுத்தத்தை கண்டு கொண்ட உலக நாடுகள் எல்லாம் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்க்க வேண்டும் என்று தங்கள் ஆவலை வெளியிட்டு வந்தன.

### புலிகளின் சொந்த விடயம்

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சில் இருந்து வாபஸ் பெறுவது என்பது அவர்களின் சொந்த விடயம்.

வாபஸ் பெற்றவுடனேயே இராணுவ ரீதியான தாக்குதலை ஆரம்பித்தது மற்றொரு விடயம்.

விடுதலைப் புலிகள் ஓர் இராணுவ அமைப்பு. ஆகையால் இராணுவ உணர்வலையை கூர்மைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

ஒரு சக்தியான அமைப்பு என்பதால் தமது பலத்தைப் பாதுகாப்பது அவர்களுக்கு தேவையாக இருக்கிறது.

அவர்கள் தங்கள் உயிரை அர்ப்பணித்தும் போராட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபட்டு வருகிறார்கள் என்பது உலகறிந்த விடயம்.

இவைகளே அவர்கள் தீவிரமான, பலமான அமைப்பாகவும் செயற்படுவதற்கு வழி அமைத்துள்ளன.

மறு புறத்தில், இவர்களது அத்தனை செயற்பாடுகளையும் நியாயப் படுத்தப்படுவதற்கான ஒரே காரணியாக இருப்பது தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அநீதிகளும், தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் இழைக்கப்பட்ட பாகுபாடுகளும் ஆகும்.

ஆகவே தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், பாகுபாடுகளையும் களையக் கூடிய அளவுக்கு, இந்த நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளுக்கு சமமான உரிமைகளைத் தமிழ் மக்களுக்கும் அங்கீகரிக்கும் அரசியல் தீர்வை அரசு முன்வைக்குமானால், நிச்சயமாக விடுதலைப் புலிகள் உட்பட அனைவருமே அவதானித்து செயற்படக்கூடிய அரசியல் நிலைமை உருவாகும் அதனைத் தடுக்க முடியாது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்பது எனது விருப்பம்.

தமிழீழ போராட்டம் நடந்து கொண்டிருந்தாலும் அறிவியல் ரீதியாக சிந்திக்கும் போது உண்மையில் தமிழருக்கென ஒரு நாடு அமைப்பது பற்றி உட்புற, வெளிப்புற தடைகள் இன்னமும் இருக்கவே செய்கின்றன.

இராணுவத்தின் முரண்பாட்டை எடுத்துக் கொண்டால் இராணுவம்: சம்பிரதாய இராணுவம்: விடுதலைப் புலிகளின் கெரில்லா அமைப்பு

அவர்களின் இராணுவ போராட்ட உத்திகள் வேறு— இராணுவத்தின் போராட்ட உத்திகள் வேறு

மறைந்து இருந்து தாக்குவது, தற்கொலைப் போராளிகளைக் கொண்டு தாக்குவது போன்ற பேராட்டங்கள் மூலமாக கெரில்லா யுத்தத்தை மேற் கொள்ளும் அமைப்புடன் சம்பிரதாய இராணுவம் வெற்றி கொண்டதாக வரலாறு இல்லை.

வியட்நாம் பேராட்டத்தை எடுத்துக் கொண்டால், அதி சக்தி வாய்ந்த அமெரிக்காவின் படையை எதிர்த்து அங்கே கெரில்லா போராட்டம் நடத்தப்பட்டு வெற்றியும் காணப்பட்டது.

இலங்கையில் இன்றுள்ள முரண்பாடு தொடர்ந்தால் 5 வருடம் சென்றாலும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

[அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு. கட்சி எம்.பிக்கள் ஆதரவை விலக்கினர்

புதுடில்லி, ஏப். 28

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பை அடுத்து அ.தி.மு. கவைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பி.வி. நரசிம்மராவுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக நேற்று அறிவித்தவர்.

தற்சமயம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரவு - செலவுத் திட்ட சீர்திருத்த சட்ட விவாதத்தில் அரசுக்கு எதிராக வாக்களிக்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

# ஜெயலலிதா பதவி விலக வேண்டும்; எதிர்க் கட்சிகள் பலவும் கோரிக்கை

சென்னை, ஏப். 28

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று பல எதிர்க் கட்சிகள் கேட்டுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக மாநிலத் தலைமைச் செயலாளரும் தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கேட்டுள்ளார்.

ஆளுனர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் கூறியதற்காகவும்.

கிரிமினல் ஊழல் வழக்கை கருத்தில் கொண்டும், அரசியல் சாசன 365 சரத்தின்படி மாநில நிர்வாகத்தை ஆளுநரிடம் ஒப்படைக்கும் படியும், குடியரசுத் தலைவர் மாநில அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் சுப்பிரமணிய சுவாமி கேட்டுக் கொண்டார்.

அவ்வாறு இல்லையெனில் அரசியல் சாசனத்தில் 356 ஆவது பிரிவைப் பயன் படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதம், குண்டர்களை வைத்து பயமுறுத்தல், ஆபாசச் செயல்கள் ஆகியவற்றுக்கு நீதிபதிகள் ஒருபோதும் பாடபடமாட்டார்கள் என்பதற்கு இந்த தீர்ப்பு எடுத்துக்காட்டு என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும்—

ஆளும் அண்ணா தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் வேறொருவரை தமது தலைவராகத் தெரிவு செய்ய வேண்டும் என்றும்— சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஜெயலலிதா பதவி விலகி தமக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எதிர் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை வெளியே கொண்டுவர இந்தத் தீர்ப்பு உதவும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட், மறுமலர்ச்சி தி.மு.க., அகில இந்திய பார்வார்ட் புளக், எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. ஆகிய கட்சிகளும் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று கேட்டுள்ளன. [ஒ-3]

## தமிழீழ நிர்வாக சேவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 28

மே தினத்தை எழுச்சியுடனும் சிறப்புடனும் நடத்துமுகமாக துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், பதாதைகளைத் தாங்கியும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அரச செயலகங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் அனைத்துப் பணியாளர்களுக்கும் தமிழீழ நிர்வாக சேவை கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர்ல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

17 வயதுப் பிரிவு — பிற்பகல் 2 மணிக்கு டிறிபேக் கல்லூரி எதிர் விக்னேஸ்வராக் கல்லூரி

19 வயதுப் பிரிவு — பி. ப. 3 மணிக்கு வேம்படி மகளிர் எதிர் டிறிபேக் கல்லூரி

4 00 மணிக்கு வலவை மகளிர் ம. வி. எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி

இப்போட்டிகள் யாவும் வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில்—

17 வயதுப் பிரிவு — பி. ப. 2.30 மணிக்கு இராமநாதன் மகளிர் கல்லூரி எதிர் வரணி ம. வி.

19 வயதுப் பிரிவு — 3.30 மணிக்கு வரணி ம. வி. எதிர் மெதடிஸ் மகளிர் கல்லூரி (அ 20)

## ஜெயலலிதாவின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சருக்கு எதிராக வழக்குத் தொடர ஆளுநர் அனுமதித்திருப்பது ஒரு நிர்வாக நடைமுறைதான் என்றும்—

இந்தச் செயல் எந்த ஒருவரினதும் உரிமையையும் பாதிக்காது என்றும் — டிவிஷன் பெஞ் தீர்ப்பில் கூறியுள்ளது.

முதலமைச்சர் மீது வழக்குத் தொடர அனுமதித்தால் பொதுநலன் பாதிக்கப்படும் என்று செல்வி. ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டதையும் நீதிபதிகள் நிராகரித்தார்கள்.

கடந்த 6 ஆம் திகதி ஜெயலலிதா இந்த ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார். (ஒ-3)

## வடமராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மீனவர்கள் விடயமாக வல்லை, பருத்தித்துறை மீனவர் சங்கங்கள் யாழ் அரச அதிபருடனும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவுடனும் தொடர்பு கொண்டுள்ளன. (இ-15-155)

# அரசின் குறிக்கோளில் மாற்றம் எதுவும் இல்லை

## பாரிஸில சந்திரிகா

பாரிஸ், ஏப். 28

ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக அடிப்படையில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற அரசாங்கத்தின் குறிக்கோளில் எவ்வித மாற்றமும் இடையாது. பெரும்பாலான இலங்கையர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள்.

பாரிஸில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இரண்டு நாள் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் 1971, 1987 ஆம் ஆண்டுகளில் நடந்தது போன்ற கிளர்ச்சிகள் மீண்டும் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் அமைதியின்மைக்கு பொருளாதாரப் பிரச்சினைகளே அடிப்படைக் காரணம்.

இவ்வாறான நிலைமைகளில் அதிகரித்த வெளிநாட்டு உதவி, இலங்கையின் பொருளாதார, மற்றும் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு இன்றியமையாதது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகத்தின் உதவி கிடைக்கப் பெறும் என்ற உறுதிமொழி வடக்கு-கிழக்கு பகுதி மக்களுக்கு முக்கியமானதாகும்.

இந்தப் பகுதிகளில் சமாதானம் அர்த்தமுள்ளதாக அமைவதற்கு இத்தகைய உதவி தேவைப்படுகிறது.

இப்படி சந்திரிகா மேலும் கூறினார். [இ-3]

## ஈழப் போர் - 3..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானமே இறுதியில் வெல்லும். அது வரை பொறுமையாக இருக்கவேண்டும் அதேவேளை சமாதானத்துக்காக முயற்சிக்க வேண்டும். அரசு சமாதானத்துக்கு அர்பணித்துள்ளது. அதே வேளை நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாப்பதும் அதன் பொறுப்பாகும்— என்று சந்திரிகா சொன்னார்.

மோதல் தவிர்ப்பை நிரந்தர போர் நிறுத்தமாக மாற்றுமாறு தாம் கேட்டதற்கு அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்று விடுதலைப் புலிகள் கூறுகிறார்களே என்று கேட்டதற்கு —

அது பொய் என்றும் நிரந்தர யுத்த நிறுத்தம் குறித்து எந்தக் கடிதத்திலும் தமக்கு எழுதவில்லை என்றும் தாமே அது குறித்துப் பிரஸ்தாபித்ததாகவும் சந்திரிகா கூறினார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இராணுவத்தின் பலத்தைப் பெருக்க எதுவுமே செய்யப்படவில்லை. இராணுவத்திற்கு ஓர் இராணுவ வீரர் கூடச் சேர்க்கப்படவில்லை ஆனால் எப்போதும் தயார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது — என்றும் சந்திரிகா தமது பேட்டியில் தெரிவித்தார். (அ)

## தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்

யாழ்ப்பாணம் ஏப். 28

300க்கும் மேற்பட்ட வடபகுதிக்கான தபால் பொதிகள் கொழும்பில் தற்போது தேங்கிக் கிடப்பதாக தெரிய வருகிறது.

சென்ற மாதம் 24 ஆம் திகதி பருத்தித் துறைக்கு வந்த கோமாரி கப்பலில் கடைசியாக எடுத்துவரப்பட்ட 244 பொதிகளுக்குப்பின் இதுவரை தபால்பொதி எதுவும் கப்பல்களில் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதேவேளை தற்போது பருத்தித்துறைக்கு வந்துள்ள 'மாஹோ' கப்பலிலும் தபால் பொதிகள் எடுத்து வரப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும், மருதானையில் 72 விடுதிகளும் கொட்டாஞ்சேனையில 33 விடுதிகளும் வாழைத்தோட்டம், கிராண்ட்பாஸ்— மாளிகாவத்தை. பகுதிகளில் சுமார் 10 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-6]

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு சபாரட்ணம்

(முன்னாள் நூலகப் பொறுப்பாளர் யாழ்ப்பாணம்)

S. S. சபாரட்ணம் அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் [illegible] நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம், பொதுசன நூலகரும் சின்னப்பு - சின்னப்பிள்ளையின் மகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேஸ் கண்ணா, [ஜேர்மனி], பானுரேகா (இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவி), ரஜீஸ் கண்ணா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பானுமீரா [இராமநாதன் கல்லூரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பொன்னம்மா நடேசு, தியாகராஜா, குலசிங்கம், சதாசிவத்தின் சகோதரனும், நாகேஸ்வரி பரமேஸ்வரவின் மைத்துனரும், சிவாவின் மாமனாரும், நிலோசினியின் சித்தப்பாவும், வைஷ்ணவி, வைஸ்சிகாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச. சிவானந்தன்

(8337)

## திருமதி தெய்வானைப்பிள்ளை சினிவாசகம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை சினிவாசகம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாதவர் சினிவாசகத்தின் அன்பு மனைவியும், சோதிநாதன் (ஜேர்மனி). இரவீந்திரநாதன் (லண்டன்), சந்திரவதனி, சுகிர்தாம்பிகை, சகுந்தலாதேவி, கமலநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் (விகிதர் கல்வித் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் சிறிய தாயாரும், சண்முகநாதன் (ஓய்வுபெற்ற, புலைவண்டி பிரதம பாதுகாவலர்) அம்பலவாணர் (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சபை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்], சண்முகலிங்கம் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற வரதராஜா, மகேந்திரன், யோகராணி, இராணி, வசந்தமதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் இன்று 28-4 95 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
த. சண்முகலிங்கம்
ஆசிரியர்

இணுவில் மேற்கு,
இணுவில்,

(8506)

## திருமதி செல்லம்மா சண்முகம்

உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா சண்முகம் 27-04-95 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சண்முகம் பார்வதியின் ஏக புத்திரியும், க. சண்முகம் (இளைப்பாறிய பிரதம லிகிதர் திவிட்டிகல) அன்பு மனைவியும், திருமதி வாலாம்பிகை, திருமதி இராஜேஸ்வரி, செல்வி கமலேஸ்வரி, திருமதி மகேஸ்வரி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க நடராசா, காலஞ்சென்ற க செல்வத்துரை, ச. பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும், அ' ஸ்ரீசரன் (நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை யாழ்ப்பாணம்], ச. சர்வஸ்வரன் [பிரதி அதிபர் இணுவில் மத்திய கல்லூரி]. இ. இ விசந்திரன் [அவுஸ்ரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தயாளினி சத்தியமூர்த்தி [கச்சேரி, யாழ்ப்பாணம்] நளாயினி, றாஜினி, வினோத்சங்கர், நிறோஜினி, தஷிபந்தினி, பிரியதர்சினி [அவுஸ்ரேலியா] ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28-04-95) வெள்ளிக்கிழமை 12 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தாவடி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. சண்முகம்
(கணவர்)

ஈஸ்வரி வாசா,
கற்பகபிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

(8507)

---


யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

## புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் விழா

இடம்: கல்லூரி வைரவிழா அரங்கு
காலம்: 29.04.1995, சனிக்கிழமை
மாலை 4.30 மணி

நிகழ்ச்சி நிரல்

தலைவர்:
திரு. மு. பரமேஸ்வரன் (அதிபர்)
மங்கள விளக்கேற்றல்:
சி. சத்தியநேசன்
(இரட்டைப்புலி மார்க், கிருஷ்ணா அப்பள உரிமையாளர்)
தமிழ்த்தாய் வாழ்த்து: மாணவிகள்
வரவேற்புரை:
திரு. சி. பத்மராஜா (செயலாளர்)
கவிதாஞ்சலி:
திரு. ந. சத்தியபாலன் (ஆசிரியர்)
பாவேந்தர் பாடல்கள்:
செல்வி த. உதயலதா (மாணவி)
தொடக்கவுரை: திரு. பொன். இராசதுரை
சிறப்புரைகள்:
"பாரதிதாசனும் தமிழ்க் கவிதையும்"
திரு. சி. சிவலிங்கராஜா
"பாரதிதாசனும் பகுத்தறிவும்"
திரு. பொன். கணேசமூர்த்தி
கவியரங்கம்:
"புதியதோர் உலகம் செய்வோம்"
தலைமைக் கவிஞர் சோ. பத்மநாதன்
கவிஞர்கள்
திரு பா. மகாலிங்கசிவம் செல்வி பொ. பகீரதி
திரு நாக. சிவசிதம்பரம் திரு. த. சசிதரன்
நன்றியுரை:
திரு. கா.ச. சிவானந்தன் (பொருளாளர்)

★ நாடகம் ★
பார்த்திபனின்
இப்படியும் சில மனிதர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
பழைய மாணவர் சங்கம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
மணியம் உணவகம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
(சி/1105)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி அழகம்மா செல்வநாயகம்

திருமதி மேரி அழகம்மா செல்வநாயகம் 27-04-1995 இல் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. C A. செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி செல்வரஞ்சிதம் நவரத்தினராசா, திருமதி தேவரஞ்சிதம் தவராசா, திரு அழகராசா (முன்னாள் பிரதம லிகிதர் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு S. E. நவரத்தினராசா, திரு. S. தவராசா, திருமதி அரியமலர், அழகராசா ஆகியோரின் மாமியாரும், கிறிஸ்ரி, ஜரீன், வெஸ்லி, ஹரன், திவாகரன், ராஜ்மலா, ராஜ்மோகன், ராஜீவன் ஆகியோரின் பேத்தியும், அன்று, சஜீபனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28-4-95) வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஏழாலை தெற்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

அறிவிப்பவர்:
S. E. நவரத்தினராசா
(மருமகன்)

தோப்பு,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்

(36435)


1995 மே நாள்

அடிமை விலங்கை உடைத்தெறிய தேசியத் தலைவர் காட்டிய பாதையில்
தேச மக்கள் நாம் ஒன்று திரள்வோம்!

மருத்தித்துறைக் கல்விக் கோட்ட
அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்

(சி/1107)

1995 மே நாள்
மாபெரும் பேரணி

ஸ்ரீலங்காவின் இன ஒழிப்பு, கல்வி ஒடுக்குமுறைக்கு எதிராக
கிளர்ந்தெழுவோம்!

(சி-1088)

- இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] 28 - 04 - 1995 அன்று வெளியிடப்பெற்றது.